## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.115 /2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு **ஜுன் மாதம் 14** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 14.06..2024**

**பெயர் - நிர்மலா**

**க/பெ - தண்டாயுதபானி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்-12 .36 பி.எம்.**

**குறுக்கு விசாரணை -**

1. இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாசுதேவன் தரப்பினர் எனக்கு வழி உரிமையை தடுத்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் மற்ற வாதிகள் எனது உறவினர்களா என்றால் இல்லை அவர்களும் பரிகாரம் கோரியே தாக்கல் செய்தனர். என்படி வாதிகள் 1 மற்றும் 2 எ அட்டவணை சொத்தில் ஐடம் 1 சொத்தினை கிரையம் வாங்கி உள்ளனர் என்றால் சரிதான். ஐடம் 2 சொத்து என்னுடையது என்றால் சரிதான். ஐடம் 3 சொத்து 4ம் வாதியினுடையது என்றால் சரிதான். எனது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 320 ஸ்ரீனிவாச நகர் 3 ம் தெரு, எனது மனை எண் 80/10. அதன் விஸ்தீரனம் என்ன என்றால் எனக்கு தெரியாது. மற்ற வாதிகளுக்காவும் நான் சாட்சியம் அளிக்கும் நிலையில் அவர்களின் சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு விச்சூர் கிராமத்தில் 11 ஏக்கர் 7 செண்ட் நிலங்கள் இருந்தது என்றால் தெரியாது. அந்த நிலங்களின் சர்வே எண்கள் 320/1 , 320/2. 321, 321/1 , 321/2, 321/3 என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 11 ஏக்கர் 7 செண்ட் நிலத்தில் 5 ஏக்கா 17 செண்ட் நிலங்களை ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் ஆகியோருக்கு 5 கிரையப்பத்திரங்களாக

கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிலங்களை விற்பனை செய்தது போக மீதமுள்ள 5 ஏக்கர் 90 செண்ட் நிலங்களை இன்றுவரை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் 5 ஏக்கர் 17 செண்ட் நிலங்களுக்கு மட்டும் அல்லாமல் பிரதிவாதிகளின் நிலங்களான 5 ஏக்கர் 90 செண்ட் நிலங்களுக்கும் சேர்த்து மொத்தம் 11 ஏக்கர் 7 செண்ட் நிலத்திற்கு தங்களது பெயர்களில் பட்டா மாற்றம் செய்துகொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தவறாக பெறப்பட்ட பட்டாவினை வைத்து தான் ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் அவர்களுக்கு உரிமை இல்லாத நிலங்களுக்கம் சேர்த்து வாதிகளுக்க கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

3. இதேபோல் வாதிகள் மட்டும் அல்லாமல் வேறு சில நபர்களுக்கும் தவறாக ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் கிரையப்பத்திரம் எழுதி கொடுத்து அதன்பேரில் தகராறு ஏற்பட்ட நிலையில் ஸ்ரீனிவாச நகர் மக்கள் நல சங்கம் என ஒன்ற உருவாக்கி அந்த சங்கம் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 256/2005 என்ற வழக்கினை நிரந்திர உருத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தனர் என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் பிரதிவாதிகளும் மேற்படி நல சங்கத்தின் மீது எதிர் வழக்கு தாக்கல் செய்து அது அசல் வழக்கு 103/2006 என இதே நீதிமன்றத்தில் நிரந்திர உருத்துக்கட்டளை பரிகாரம் கோா தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

4. மேற்படி வழக்கான 256/2005 ல் இ.ம.எண்.1369/2009 ல் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு நில அளவையர் கொண்டு மேற்படி நிலங்களை அளந்து அதில் 5 ஏக்கர் 17 செண்ட் நிலங்கள் மற்றும் 5 ஏக்கர் 90 செண்ட் நிலங்கள் பிரிக்கப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து மக்கள் நீதிமன்றத்தில் மேற்படி சங்கத்திற்கும் பரதிவாதிகளுக்குள்ளும் சமரச உடன்படிக்கை ஏறப்ட்டு அதன்படி பிரதிவாதிகளின் 5 ஏக்கர் 90 செண்ட் ல் மேற்படி சங்க உறுப்பினர்கள் வரக்கூடாது என ஒப்புக்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5. மேற்படி உத்தரவை தொடர்ந்து பிரதிவாதிகள் வருவாய் கோட்டாச்சியர் மற்றும் வட்டாச்சியர் பொன்னேரி அவர்களிடம் மேற்படி 5 ஏக்கர் 90 செண்ட் நிலத்திற்கு பிரதிவாதிகளின் பெயரில் பட்டா மாற்றித் தர மனு செய்து மனு நிலுவையில் இருந்தபோது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 27061/2013 தாக்கல் செய்து உத்தரவு பெற்று அந்த

உத்தரவின் அடிப்படையில் வருவாய் கோட்டாச்சியர் 10.02.2013 அன்று நா.கா.எண் 26291/ 2012 / A 2 வில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரதிவாதிகளின் பெயருக்கு 5 ஏக்கர் 90 செண்ட் நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. மேற்படி பட்டா மாற்றம் செய்த வட்டாச்சியர் உத்தரவினை வருவாய் கோட்டாச்சியர் ஊர்ஜிதம் செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவுகளின் அடிப்படையில் ராக்கம்மாள் மற்றும் சந்திராபாயிடம் கிரையம் பெற்ற 21 நபர்களின் பட்டாக்களை வட்டாச்சியர் அலுவலகத்தில் ரத்து செய்யதனர் என்றும் அதன் அடிப்படையில் அதே ராக்கமம்மாள் மற்றும் சந்திராபாயிடம் கிரையம் பெற்ற வாதிகளாகிய எங்களுடைய பட்டாக்களும் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 ம் வாதிகள் டிம்பிள் டிரேடர்ஸ் என்ற பெயரில் வியாபரம் செய்வதாக நான் வழக்குரையில் தெரிவித்துள்ள நிலையில் அதற்கு ஏதேனும் ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. மற்ற வாதிகள் அவர்கள் வாங்கியதாக கூறும் மனையில் கட்டிடம் கட்டி உள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. மற்ற வாதிகள் சொத்துக்கள் குறித்து இவ்வழக்கில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே எந்த தேதியில் எவ்வாறு தகராறு ஏற்பட்டது என்றால் நாங்கள் வீடு கட்டி முடித்த பிறகு அங்கு செல்வதற்கு பிரதிவாதிகள் வழி விடாமல் தகராறு செய்தனர் தேதி எனக்கு நினைவில் இல்லை. எனது வழக்குரையில் பிரதிவாதிகள் தகராறு செய்ததால் காவல்நிலையம் சென்றதாகவும் அஙகே நிர்பந்தம் செய்யததால் வழக்கு தாக்கல் செய்தேன் என்று தெரிவித்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களை சுற்றி சுற்று சுவா அமைத்து கேட் அமைத்து தடுத்துள்ளனரா என்றல் ஆமாம். கேட் அமைத்துள்ளனர் அங்கே கேட் உள்ளது. அந்த கேட்டின் உள்தான் நான் வாங்கி இருக்கும் தாவா சொத்து உள்ளதா என்றால் ஆமாம். அந்த கேட்டினுள் நான் கட்டிய வீடு இன்றளவும் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த தேதியிலும் அந்த வீடு இருந்ததா என்றால் இருந்தது.

8. அவ்வாறெனில் வழக்குரையில் சொத்து அட்டவணையில் 2 ம் இன சொத்தில் வீட்டடினை குறித்து சொத்து விவரத்தில் காண்பிக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான்காவது பரிகாரமாக கட்டுமாணத்தை இடிக்க உத்தரவு பிறப்பிக்க கோரி பரிகாரம் கேட்டு உள்ள நிலையில் அதற்காக தகுந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால்

வழக்கு தள்ளபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மேலும் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்திர உறுத்துக்ட்டளைை பரிகாரம் மட்டும் கோரி இருப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது சொத்தில் சுற்று சுவர் அமைத்து கேட் போட்டதாக கூறும் நிலையில் அந்த சுற்று சுவருக்குள் தான் எனது தாவா சொத்து அமைந்துள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் இவ்வழக்கில் நான் வழக்கறிஞர் ஆணையர் அமைக்கவோ அல்லது வேறு வழியிலோ முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை.

9. நான் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான வா.சா.ஆ 1 முதல் 3 வரையிலானவை ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் ஆகியோர் போலியாக செய்து கொடுத்த கிரைய அவணங்கள் என்றும் அதன் அடிப்படையில் பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் வா.சா.ஆ 4 மற்றும் 5 காவல் ஆய்வாளர் மற்றும் காவல்துறை டி.ஜி.பி ஆகியோருக்கு அறிவுப்பு அனுப்பியதாக தாக்கல் செய்துள்ள நிலையில் அதற்குரிய ஒப்புகை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 வழக்கிற்கு பின்னிட்ட ஆவணம் என்றும் வா.சா.ஆ 6 மற்றும் 7 வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ 9 மற்றும் 10 போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 11 புகைப்படங்கள் யார் எடுத்தது என்றால் நாங்கள் தான் எடுத்தோம். வா.சா.ஆ 11 புகைப்படங்கள் தாவா சொத்தினுடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கில் அரசு துறையினர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் reply statement ல் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. வழக்குமூலம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 1.37.பி.எம்.**